26.03.2026

CC.38/2015

PW–1, செல்லமணி த/பெ.அர்ச்சுனன்

(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

எனக்கும் எதிரிகளின் தகப்பனரான சகாதேவனுக்கும் பொது பாத்தியப்பட்ட கிணறு உள்ளது என்றால் சரிதான். அதில்நானும் எதிரிகளின் குடும்பத்தாரும் தனித்தனியாக விவாசயம் செய்து வருகிறோம் என்றால் சரிதான். எங்களுக்கும் எதிரிகளுக்கும் தண்ணீர் பாய்ச்சுவது சம்பந்தமாக பொதுவாக பிரச்சினை இருந்தது என்றால் சரிதான். 17.082.014ம் தேதி பகல் 12 மணிக்கு மேற்படி தோட்டத்தில் வைரமணி, சகாதேவன், ஜோதி ஆகியோர்கள் பைப்பை உடைத்தார்களா என்றால் உடைத்தார்கள். ஏன் அவ்வாறு என்று கேட்டேனா என்றால் கேட்டேன். நான் கேட்டதால் எதிரிகள் சகாதேவன், வைரமணி, ஜோதி,. என்னையும் என் மகன் பிரகாஷ்யும் காயப்படுத்தியதாக புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி காயத்திற்கு நான் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டேனா என்றால் எடுத்தேன். மேற்படி சம்பவத்திற்கு திருமங்கலம் நகர் காவல் நிலையத்தில் குற்ற எண்.463/2014 பிரிவு 323, 324, 427, 506(2) இதசவின் கீழ் வழக்கு போட்டார்கள் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு விசாரணைக்கு வந்து நான் சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான். அந்த விசாரணையின் முடிவில் 3 எதிரிகளும் குற்றவாளிகள் என முடிவு செய்யபட்டு ரூ.1000/– அபராதம் நீதிமன்றத்தில் கட்டியுள்ளார்கள் என்றால் சரிதான். **அந்த வழக்கின் தீர்ப்புரை கணினி நகல் எ.த.சா.ஆ1 ஆகவும அதே வழக்கில் எதிரிகள் அபராத தொகையை கட்டியதற்கான ரசீதுகள் (எண்ணம் –3) எ.த.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேற்படி சம்பவத்திற்கு தீர்ப்போடு முடிந்துவிட்டது என்று சொன்னால் சரியல்ல.

மேற்படி சம்பவத்தை முன்விரோதமாக வைத்து 17.09.2018ம்தேதி பகல் 1.30 மணிக்கு சகாதேவன், வைரமணி, ஜோதி ஆகியோர்கள் தோட்டத்தில் இருக்கும் போது எனது மகன் வைரபிரகாஷ், செல்வம், முத்துப்பிள்ளை,. ஆகிய நபர்கள் கம்பு, அருவாள் போன்ற ஆயுதங்களால் தாக்கினோம் என்று சொன்னால் சரியல்ல. சம்பவத்தில் 3 பேரும் அடிப்பட்டு மதுரை ராஜாஜி மருத்துவமமனையில் சுமார் 1 மாத காலம் சிகிச்சை பெற்று வந்தார்கள் என்றால் சரியல்ல. மேற்படி சம்பவத்திற்கு என் மீது திருமங்கலம் நகர் காவல் நிலையத்தில் குற்ற எண். 14/2018 பிரிவு 323, 324, 427, 307, 506(2) இதச மற்றும் பிரிவு 4 TNPHW Actன் படி வழக்கு போட்டார்கள் என்றால் சரிதான். அந்த வழக்கில் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டு விசாரணை முடிக்கப்பட்டு அதில் வைரமணி, சகாதேவன், ஜோதி ஆகியோர்கள் சாட்சியம் அளித்து தண்டிக்கப்பட்டார்கள் என்றால் சரிதான். **அந்த தீர்ப்பு எ.த.சா.ஆ3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. நான்வேண்டும் என்றே நடக்காத சம்பவத்திற்கு எதிரிகளின் மீது திருமங்கலம் நகர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி புகார் பொய் புகார் என்பதால் காவல் நிலையத்தில் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. ஏற்கனவே நடந்த சம்பவத்திற்கு மறுபடியும் தனிப்புகார் என்ற பெயரில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டு எதிரிகளை பழிவாங்க வேண்டும் நோக்கில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் காவல் நிலையத்தில் கொடுத்த புகாருக்கு மனு ரசீதுகள் கொடுத்தார்களா என்றால் இல்லை. நான் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அவர்களிடம் கொடுத்த புகாருக்கு திருமங்கலம் நகர் காவல் ஆய்வாளரை மேற்படி புகார் சம்பந்தமாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.